Deccan Chronicle

Dated: 10.08.2024

# Time to give J&K people's govt: CEC

Srinagar: Chief Election Commissioner Rajiv Kumar on Friday said that the people of Jammu and Kashmir are eagerly waiting for the Assembly polls and it was time to fulfil their deep longing. However, the dates for the democratic exercise will be decided after the final review of the security situation in the Union Territory, he added. "It's time to give you your elected government. No internal or external powers can derail elections here," Mr. Kumar said.

Dt. Next

Dated: 10.08.2024

# CEC says J&K polls at earliest, won't let internal or external forces disrupt it

JAMMU: Chief Election Commissioner Rajiv Kumar on Friday said no internal or external forces would be allowed to disrupt the assembly elections in Jammu and Kashmir which will be held 'at the earliest'. Talking to reporters at the end of the two-day visit of an Election Commission delegation to the Union Territory, Kumar emphasised that all political parties in the region have sought for the assembly elections to take place soon. This was the first major exercise for preparing the grounds for holding the maiden assembly elections in Jammu and Kashmir after it was downgraded to a Union Territory on August 5, 2019, following the abrogation of Article 370 of the Constitution. The visit of the three-member EC team led by Kumar comes ahead of the September 30 deadline given by the Supreme Court earlier this year for the completion of assembly elections in Jammu and Kashmir. "We are committed to conducting elections at the earliest in Jammu and Kashmir. We are confident that the people will respond robustly to any disruptive forces", Kumar said.

The Times of India

Dated: 10.08.2024

# J&K poll dates post final security review in Delhi, says CEC

Saleem.Pandit@timesofindia.com

**Srinagar:** Chief Election Commissioner (CEC) Rajiv Kumar on Friday said the Election Commission of India was committed to holding assembly elections in Jammu and Kashmir at the earliest, but the suspense over poll dates continued as he underscored that the timeline would be finalised only after a final security assessment in New Delhi.



ANI

**SERIOUS TALK:** Chief election commissioner Rajiv Kumar in Jammu on Friday

Addressing a press conference in Jammu on the concluding day of the EC team's visit to J&K to assess the ground situation for conducting polls, the CEC, flanked by election commissioners Gyanesh Kumar and S S Sandhu, asserted that no external or internal forces would be allowed to disrupt the democratic process.

The CEC stressed that the terror attacks could not be allowed to create a "chicken and egg situation" with regard to elections. Such attacks were likely to see an uptick whenever there were talks of holding polls. If the poll process was halted because of that – hoping to go ahead after an improvement in the situation – it would be like conceding defeat, he added.

"The feedback we got from security heads, officers of the administration and district police chiefs is that though there are a few security challenges, they are ready for ensuring peaceful elections," he added.

J&K has been under central rule since June 2018, when the PDP-BJP coalition govt, which had come to office after Dec 2014 polls, collapsed.

The next elections were due in 2019, but in Aug that year, the Centre abrogated Article 370 of the Constitution, stripping Jammu & Kashmir of its special status, and also bifurcated it into two Union territories.

The Times of India

Dated: 10.08.2024

## Govt: No plans for alternative to electoral bonds

**New Delhi:** The government on Friday told the Lok Sabha that it has no plans to bring any law regarding electoral bonds for the funding of political parties, while replying to questions on electoral bonds.

The govt has also said it has no plans for an alternative funding proposal to the electoral bonds either, for the political parties, reoprts **Mohua Chatterjee**. Law and justice minister Arjun Ram Meghwal was replying to a query by TMC MP Mala Roy who asked "whether the govt has any plan to bring any law regarding electoral bonds for political party funding."

Dt.Next, Dated: 10.08.2024

## No plan for law on electoral bonds: Govt

**NEW DELHI:** There are no plans to bring a law on electoral bonds for funding of political parties, the Lok Sabha was informed. It was also told that no proposal for funding of political parties through the Election Commission was under consideration. In a written reply, Law Minister Arjun Ram Meghwal replied in the negative on whether the government had any plan to bring a law regarding electoral bonds for political party funding. He also said there is no proposal to fund political parties through the Election Commission.

Dinamalar, Dated: 10.08.2024

# வாக்காளர் சரிபார்ப்பு தேர்தல் கமிஷன் உத்தரவு

சென்னை, ஆக. 10–

மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் கமிஷன் அனுப்பி உள்ள சுற்றறிக்கை:

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம், வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடக்கும். இந்த ஆண்டும் பணியை இரண்டு கட்டமாக துவக்க வேண்டும். முதலில் வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்காக, வரும் 20ம் தேதி முதல் அக்., 10ம் தேதி வரை, ஓட்டுச்சாவடி அலுவலர்கள் வீடு வீடாக சென்று, வாக்காளர் பட்டியலில் உள்ளவர்கள் விபரங்களை சரிபார்க்க வேண்டும்.

அடுத்து அக்., 19 முதல் 28 வரை, வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும். அக்., 29ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட வேண்டும். அன்று முதல் நவ., 28 வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற விண்ணப்பங்கள் பெறலாம். சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும்.

அடுத்த ஆண்டு ஜன., 6ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட வேண்டும். சிறப்பு முகாம்கள் தேதியை, தலைமை தேர்தல் அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

The Hindu (Tamil) Dated: 10.08.2024

# காஷ்மீரில் கூடிய விரைவில் பேரவைத் தேர்தல் தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

**ஜம்மு:** ஜம்மு–காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியலமைப்பு சாசனத்தின் 370–வது பிரிவு 2019–ம் ஆண்டு ஆகஸ்ட் 5–ம் தேதி நீக்கப்பட்டது. மேலும் மாநிலமானது, ஜம்மு–காஷ்மீர், லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசால் பிரிக்கப்பட்டது.

இந்நிலையில், ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை ஆய்வு செய்ய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையிலான தேர்தல் ஆணையக் குழுவினர் 2 நாட்களுக்கு முன்பு ஸ்ரீநகர் வந்தடைந்தனர்.

இந்த ஆய்வுக் குழுவில் தலைமைத் தேர்தல் ஆணையர் தவிர, தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார், சுக்பிர் சிங் சாந்து இடம்பெற்றுள்ளனர். இந்த ஆய்வு பயணத்தின்போது தேர்தல் ஆணையக் குழு, போலீஸ் டிஜிபி, மாவட்ட ஆட்சியர்கள், யூனியன் பிரதேசத்தில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்து ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினர். இந்நிலையில் ஜம்முவில் நேற்று ராஜீவ் குமார் கூறியதாவது:

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பேரவைத் தேர்தலை நடத்த, தேர்தல் ஆணையம் உறுதி பூண்டுள்ளது.

அதன்படி ஜம்மு–காஷ்மீரில் கூடிய விரைவில் தேர்தல் நடைபெறும். ஜம்மு–காஷ்மீரில் தேர்தலை நடத்தவேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சியினரும் விரும்புகின்றனர். தேர்தலை முறியடிக்க நினைக்கும் சக்திகளை காஷ்மீர் மக்கள் தோற்கடிப்பர். தேர்தலை நடத்த அனைத்து விதமான ஏற்பாடுகளையும் தலைமைத் தேர்தல் ஆணையம் செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

Dinamalar, Dated: 10.08.2024

# ‘காலை 8:45க்குள் 4.60 கோடி ஓட்டு பதிவானது எப்படி?’

## லோக்சபா தேர்தல் முறைகேடு என பிரசாரம் செய்ய நிர்மலா கணவர் முடிவு

**சென்னை, ஆக. 10–**

“லோக்சபா தேர்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டு, ஜனாதிபதிக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் லட்சக்கணக்கான தபால் கார்டுகளை அனுப்ப வேண்டும்,” என, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும், பொருளாதார நிபுணருமான பரகலா பிரபாகர் பேசினார்.

‘வாய்ஸ் ஆப் தமிழ் நாடு’ என்ற அமைப்பின் சார்பில், சென்னையில் நேற்று முன்தினம், ‘2024: திருடப்பட்ட தீர்ப்பு’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

இதில், பரகலா பிரபாகர் பேசியதாவது:

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், மொத்தம் பதிவான ஓட்டுகளை தேர்தல் ஆணையம் அறிவிக்கவில்லை; சதவீதமாக தான் வெளியிட்டது. ஓட்டு எண்ணிக்கை முடிந்த பின், 11 நாட்கள் கழித்தே அதன் விபரங்களை வெளியிட்டது.

இரண்டாம் கட்டமாக நடந்த தேர்தலில், பதிவான ஓட்டு விபரங்கள் தற்போது வரை இல்லை.

### சந்தேகம்

தேர்தலுக்கு முன் சிறப்பாக பிரசாரம் செய்யக்கூடிய இரண்டு முதல்வர்களை கைது செய்தனர். பிரதான எதிர்க்கட்சியின் வங்கி கணக்கு முடக்கப்பட்டது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்த



பரகலா பிரபாகர்

பின், தேர்தல் நியாயமாக நடப்பதாக தேர்தல் ஆணையம் சொல்கிறது.

ஓட்டுப்பதிவு நடந்த அன்று காலை 7:00 முதல் 8:45 மணிக்குள், குறிப்பிட்ட 79 தொகுதிகளில், 4.60 கோடி ஓட்டுகள் பதிவான அதிசயம், இந்த தேர்தலில் நடந்தது. அந்த தொகுதிகள் தான் பா.ஜ., வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளன.

இத்தனைக்கும் பின், தேர்தல் ஆணையம் சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்படுகிறது என்று கூறும்போது தான் சந்தேகம் வருகிறது.

தமிழகத்தில் ஒரே கட்டமாக, 39 தொகுதிகளில் தேர்தல் நடந்ததில், பா.ஜ., ஓட்டு சதவீதத்தை அதிகரித்துள்ளனர். ஆனால், வெற்றி பெறவில்லை.

தமிழகத்தை விட குறைந்த தொகுதிகள் உடைய ராஜஸ்தான், கர்நாடகா, ம.பி., ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில், இரண்டு கட்டம், நான்கு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இது ஏன் என்பதுதான் கேள்வி.

### தபால் கார்டு

தொகுதிகள் குறைந்த இடங்களை உடைய மாநிலங்களில், பல கட்டங்களாக தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் என்ன என்பதை தேர்தல் கமிஷன் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும்.

இரண்டாம் கட்ட தேர்தலில், 88 தொகுதிகளுக்கு ஓட்டுப்பதிவு நடந்தது. இதில், பதிவான ஓட்டு விபரங்களை, தற்போது வரை வெளியிடவில்லை.

ஆனால், இரண்டாம் கட்டத்தில் நடந்த தேர்தலில்தான், அதிக தொகுதிகளில் பா.ஜ., வெற்றி பெற்றுள்ளது. இதுதான் கட்சிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இதுகுறித்து அரசியல் கட்சிகள் குரல் எழுப்ப வேண்டும்.

இந்த மாதிரியான தேர்தல் சந்தேகம் குறித்த கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு, லட்சக்கணக்கான தபால் கார்டுகளை ஜனாதிபதிக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். தபால் கார்டுகளின் மூட்டைகளால், ஜனாதிபதி மாளிகை நிரம்பி வழிய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதே கருத்தை மையப்படுத்தி, கடந்த ஆக., 8ம் தேதி வெளியான முரசொலி பத்திரிகையில், ‘திருடப்பட்ட வெற்றி’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிடப்பட்டிருந்தது.